**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.**
**O.S.No.85/2020**

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879ம் ஆண்டின் 10 வது சட்ட விதிகளின் படி திருமதி. சரஸ்வதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இளங்கோ | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | | கிராமம் | : | |
| வயது | : | | வட்டம் | : | காஞ்சிபுரம் |

**பி.வா.சா.1 முதல் விசாரணை**

1. நான் எனக்கு அளிக்கப்பட்ட அழைப்பாணையின் அடிப்படையில் தற்போது சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கில் எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அளிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தாவா இடத்தை வழக்கறிஞர் ஆணையர் என்ற முறையில் சென்று அளந்து எனது அறிக்கையை தாக்கல் செய்தேன். நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் காலி இடத்தை பார்வையிட்டு அதன் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன். காலி இடத்தில் இருந்து மரங்களை பார்வையிட்டு அதனை தாக்கல் செய்துள்ளேன், ஆனால் என்ன மரங்கள் என்று தற்போது ஞாபகமில்லை. சாட்சியிடம் ஏற்கனவே இடைக்கால மனு எண். 4/2022ல் அவர் தாக்கல் செய்த அறிக்கை நீ.ம.சா.ஆ.1 முதல் 3 காண்பிக்கப்பட்டது.

2. வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கைக்கு பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனையுடன் தாக்கல் செய்யப்பட்ட 4 புகைப்படங்கள் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது அவை தாவா சொத்துதானா என்று தனக்கு சொல்ல இயலவில்லை என்று தெரிவித்தார். இந்நிலையில் அதில் உள்ள ஒரு புகைப்படத்தை தாவா சொத்து என்று சாட்சி அடையாளம் காட்டியதன் அடிப்படையில் அந்த புகைப்படம் மட்டும் **பி.வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் அரசு மான்ய தொகுப்பு வீடு என்று குறிப்பிட்டுள்ளேன், அது யாருடையது என்று நான் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். அந்த வரைபடத்தில் உள்ள பொது வழி ஆக்கிரமிப்பு உள்ளதாக காட்டியுள்ளேன் அதன் அளவுகளை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நத்தம் சிட்டா பதிவேட்டை நான் பார்வையிட்டேனா என்றால் எனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்களை பார்வையிட்டேன்.

4. நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் வாதியின் சகோதரி வீடு என்று குறிப்பிட்டுள்ளேன் ஆனால் காலி இடத்தை பற்றி எந்த குறிப்பும் கொடுக்கவில்லை. கள ஆய்வின் அடிப்படையில் தான் ஆக்கிரமிப்பு உள்ளது என்று தெரிவித்துள்ளேன்.

**இத்துடன் முதல் விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை</u>**

**<u>மறு விசாரணை – இல்லை.</u>**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.